# இந்துமதம் எப்போது தோன்றியது ?



D.A.ஜோசப்

www.dajoseph.com E-mail : deyeje@yahoo.com

# இந்து மதம் எப்போது தோன்றியது?

## ஸ்ரீ வைணவச் சூடாமணி டி.ஏ. ஜோசப்

Web : www.dajoseph.com

உலகின் மிகத் தொன்மையான[1] மதம் இந்து மதம்தான் என்று ஒப்புக்கொண்டு அகில உலக கல்விக்கழகம் (UNESCO) மனித இனத்தின் முதல் இலக்கியம் – அதாவது காலத்தால் முதல் இலக்கியம் – ரிக்வேதம் தான் என்று சமீபத்தில் அறிக்கைவிட்டுள்ளது. அதன் பிரதியையும் தன் நூலகத்தே வைத்துப் பாதுகாக்கிறது. உலகின் முதல் கண்அறுவைச் சிகிச்சை செய்தவர் சுஸ்ருதர்தான் என்று கூறி மருத்துவத்தின் முன்னோடி இந்தியாவே என்று அலோபதி மருத்துவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்கள். கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட எகிப்திய பிரமிடுகளில் இந்திய நாட்டு சூரிய வழிபாட்டுமுறை, ஜோதிடம் ஆகியவற்றைப்பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன என்று அகழ்வாராய்ச்சி வல்லுனர்கள் உறுதி செய்துள்ளார்கள். இந்தியா வந்து திரும்பிய அலெக்ஸாண்டர் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில் ஆன்மீகம் முழுவளர்ச்சி அடைந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறார். அவருடைய சேனை வீரர்களுக்கு பாம்புக்கடி ஏற்பட்டபோது இந்தியர்கள்மந்திரம் ஜபித்தே அவர்களை குணப்படுத்திய செய்தியும் வரலாற்றில் காணப்படுகிறது. இப்படி, கணக்கில்லாத வரலாற்று ஆதாரங்களை இந்து மதத்தின் தொன்மைக்குச் சாட்சியாக அடுக்கிக் கொண்டு போகலாம். ஆனால் சென்றவாரம் பெய்த மழையில் இந்தவாரம் முளைத்த காளான்கள் போலிருக்கும் சில பிற்கால மதங்கள் தம்மை இந்து மதத்துக்குத் தாயாகக் கூறிக்கொள்கின்றன. இந்தியர்களுக்கு வைத்தியம். பண்பாடு, சிற்பம், நாகரீகம் ஆகியவற்றை கற்றுத்தந்ததாகப் புலம்பிக் கொண்டிருக்கின்றன. ஈதென்ன பேதமை?.

“புத்தமதத்தைத் தோற்றுவித்தவரும் தோன்றிய காலமும் வரலாற்றில் பார்க்கிறோம். இதேபோல சமணம், இஸ்லாமியம், கிறிஸ்துவம் முதலிய மதங்களுக்கும் தோன்றிய காலம் தோற்றுவித்தவரைப் பற்றிய விவரங்கள் ஆகியவை உள்ளன. ஆனால் உங்கள் இந்துமதத்துக்கு இப்படி ஒரு வரலாறும் இல்லையே” என்று ஒரு அமெரிக்கர் ஸ்வாமி விவேகானந்தரைக் கேட்டபோது “அதுதான் இந்துமதத்தின் சிறப்பு” என்று விடையளித்தார் ஸ்வாமிஜி. இந்து மதம் காலத்தை கடந்தது. அனாதியானது: சரித்திரத்தை வென்றது. காட்டு வெள்ளத்தைக் கைப்பிடிக்குள் அடக்க முயற்சிப்பதுபோல இன்றைய அரைவேக்காட்டு அறிஞர்கள் இந்து மதத்தைக் காலண்டரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயலுகிறார்கள். இது மடமையிலும் மடமை.

முதலில் “ஆரியர் வருகை” என்ற ஒரு மாபெரும் சரித்திரக் குற்றச்சாட்டைஎடுத்துக் கொள்வோம். அறிவுக் குறைபாடு உள்ளஇந்திய சமுதாயத்தை எங்கிருந்தோ வந்த ஆரிய இனத்தினர் தோற்கடித்து மேலாண்மை செலுத்தி தங்கள் மதத்தை இவர்களுக்குள் புகுத்தினார்கள்

என்று சொல்லுகிறார்கள். "ஈரானியர்" என்ற சொல் "ஆரியர்" என்று மருவிற்று என்றும் சொல்லுகிறார்கள். அந்த ஆரியர்தான் இந்தியாவில் சாதிப்பாகுபாட்டை ஏற்படுத்தி தங்களை பிராமணர் என்று சொல்லிக்கொண்டு மேல்நாட்டு மதக்கருத்துக்களை இந்தியர் தலையில் புகுத்தினார்கள் என்பது அவர்கள் வாதம்.

உலகம் இன்று மிகச் சுருங்கிவிட்டது. ஈரானிய சமுதாயம் எங்கோ சுக்ர மண்டலத்தில் இல்லை. இதே பூமியில் ஈரான் ஈராக் பிரதேசத்தில்தான் இன்றும் இருக்கிறது. பம்பாயிலிருந்து சிலமணி நேர பயணத்தில் அங்கே போய் அவர்களைச் சந்தித்துவிடலாம். இவர்கள் சொல்கிற அந்த ஈரானிய சமுதாயத்தின் உடல் அமைப்பு, விழி நிறம், உச்சரிப்பு, உணவு பழக்கங்கள், மொழி, இலக்கணம், ஆன்மீகக் கொள்கைகள் ஆகியவற்றுக்கும், இந்தியாவிலே இவர்களால் ஆரியர் என்று குறிப்பிடப்படுகிறவர்களுடைய மேற்கூறிய விஷயங்களுக்கும், தலைமுடி அளவாவது தொடர்பு இருக்கிறதா?. இந்த நாட்டுக் குடுமியும், பூணூலும், பருப்பு சாதமும், சமஸ்கிருத மந்திரமும், ஆச்சாரமும், அனுஷ்டானமும், அஹிம்சாவாதமும், அந்தநாட்டு சமூகத்தோடு இன்றுமட்டும் அல்ல, முன் என்றாவது ஒத்துப்போனதாக வரலாறு உண்டா?. பிதற்றினாலும் பொருத்மாகப் பிதற்ற வேண்டாமா?.

வர்ணாசிரம தர்மம் என்ற பாகுபாடு மிகத்தொன்மையான ரிக்வேதத்திலும், மிகத் தொன்மையான தமிழ் இலக்கியங்களிலும், இந்தியாவின் மற்ற மாநிலப் பழம் இலக்கியங்களிலும் காணப்படுகிறது. இன்றைய அரை வேக்காட்டு ஆய்வாளர்கள் கூறுவது போல அது கி.பி. 7ஆம் நூற்றாண்டுக்குப்பின் ஏற்பட்டதல்ல. தமிழரை ஆரியர் அடக்கி ஒடுக்கி கோயில்களில் வடமொழி முழங்கச் செய்தவர்கள் என்று கூறுகிறார்கள்.

ஆனால் இந்தக் கலியுகத்தின் தொடக்கத்துக்கு முன்பே புழக்கத்தில் இருந்த, முதல் ஆழ்வார்கள் பாசுரங்களும், நம்மாழ்வாரின் திருவாய்மொழியும், கோயில்களில் ஒலித்த வரலாறு இன்றும் நம் கையில் உள்ளது. அதை உச்சரித்தவனும் இவர்கள் சொல்லும் ஆரியன்தான். பெருமாள் கோயில்களிலே திருவீதி புறப்பாடு நடக்கும்போழுது தமிழ்வேதம் சேவிப்பவர்கள் முதலிலும், அந்த கோஷ்டிக்கு பின்பு பெருமாள் திருமூர்த்தியும், மூர்த்திக்குப் பின்னால் வடமொழி வேதம் சேவிப்பவர்களும் செல்ல வேண்டும் என்று வரிசைமுறை எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளாக ஆரியர்களால் கடைபிடிக்கப்பட்டு வந்திருக்கிறது. பிராம்மணனைவிட வைணவன் உயர்ந்தவன் என்று எழுதிய[35] அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும், அதற்கு உரை எழுதிய மணவாளமாமுனிகளும், வேளாள இனத்தைச் சேர்ந்த நம்மாழ்வார், பிராம்மண ஆழ்வார்களைவிட உயர்ந்தவர் என்று சொன்ன இராமனுஜரும், அந்தச் சம்பிரதாயத்தை இன்றுவரை கட்டிக் காத்துவரும் ஆசார்ய பரம்பரையினரும் பிராம்மணர்கள்தான். ஆரியர் ஆதிக்கம் என்பது வெறும் கற்பனையே!

ஆதி சங்கரர்தான் மனுதர்மத்தை ஏற்படுத்திச் சாதிபாகுபாட்டை உண்டுபண்ணினதாக ஒரு கருத்து சொல்லப்படுகிறது. இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?. மனுதர்ம சாஸ்திரம் ஆதிசங்கரர் தோன்றுவதற்கு

முன்பே மக்களால் கடைபிடிக்கப்பட்டு வந்தது என்பதை பல கோயில் கல்வெட்டுக்களில் காணலாம். ஜாதியைச் சொல்லி மக்களைக் கொடுமைப்படுத்தியதாக இந்துமதத்தைச் சாடுகிறார்கள் மற்ற மதத்தினர். ஆனால் மீனவப் பெண்ணுக்குப் பிறந்த வியாசரையும், நெசவு நெய்த திருவள்ளுவரையும், செருப்புத் தைக்கும் குலத்தில் பிறந்த அருந்ததியையும், பறையர் குலத்தில் பிறந்த மாறனேர் நம்பியையும், மிலேச்சர் இனத்தில் பிறந்த திருமங்கை யாழ்வாரையும் இந்து மதம்தான் வணக்கத்திற்குரியவராக சொல்லிக்கொடுத்தது. வள்ளலாரையும், திருப்பாணாழ்வாரையும், நந்தனாரையும் உயர்சாதிக்காரர்கள தீயில் போட்டுபொசுக்கிவிட்டதாக இன்று பிற சமயத்தினர் சாடுகிறார்கள். அவர்கள் என்ன ஆதாரத்தில் அப்படி பேசுகிறார்கள்?. அவ்வளவு ஜாதி வெறி இந்த நாட்டு ஆன்மீகவாதிகளுக்கு இருந்திருந்தால் அவர்களை வணங்குவதுகூட பாவம் என்று சொல்லியிருக்கமாட்டார்களா?. தாழ்த்தப்பட்ட இனத்தவரைத் திருக்குலத்தார் என்ற பெயரிலே கோயிலுக்குள் ராமானுஜர் பிரவேசிக்கச் செய்திருக்கிறாரே.

பெரிய புராணத்து நாயன்மார்களில் மாணிக்கவாசகர் சேர்க்கப்படாமல் விடப்பட்ட காரணம் ஆரியத்தின் ஆதிக்கமே என்று இன்றைய புறச்சமய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். அப்படியானால் பெரிய புராணத்தில் பாடப்பட்ட நாயன்மார்கள் அனைவருமே ஆரியர்களா?. அவர்களிலே சலவைத் தொழிலாளி இல்லையா?. கீழ்நிலைப் பணியாளர்கள் இல்லையா?. மாணிக்கவாசகர் பாசுரம் பாட, சிவன் அதை ஏடுபடுத்தினார் என்று கூறி திருவாசகத்துக்கு உருகார் ஒருவாசகத்துக்கும் உருகார் என்று மாணிக்கவாசகரை ஒரு படிமேலே அல்லவா அவர்கள் பெருமைப்படுத்தினார்கள்!.

உலகின் முதல் மனிதன் ஆதாம் என்பதைத்தான் ஆதன் என்றம் ஆதி சிவன் என்று குறிப்பிடுகிறார்கள் என்று ஒருபுறச் சமய மேதை கூறுகிறார். ஆதாமினுடைய உடலிலிருந்து ஏவாள் படைக்கப்பட்டதைத்தான் "சிவனுடைய ஒருபாதி பார்வதி" என்பதாக இந்துமதம் கூறுகிறது, என்பது இவர்வாதம். பிறவாயாக்கைப் பெரியோன் என்று ஆதாம்தான் அழைக்கப்படுகிறான் என்கிறார். இந்த பிறவாயாக்கைப் பெரியோனைப் பற்றி ஒரு கேள்வி . இவனுடைய மூத்த மகன் காயீன் தன் தம்பி ஆபேலைக் கொன்றபோது கடவுள் காயீனைத் தண்டிப்பதற்காக அவனைப் புனித தோட்டத்திலிருந்து விரட்டி விட்டார் என்று விவிலியம் (Bible) கூறுகிறது. அப்படி விரட்டப்பட்ட காயீன் பக்கத்து நாட்டுக்குச் சென்று பிறஜாதியாரோடு கலந்து திருமணம் புரிந்து வாழ்ந்தான் என்றும் விவிலியம் கூறுகிறது. அந்த பிற ஜாதியார் யார்?. அவர்களைப் படைத்தது யார்?. ஆதாமுக்கு முன்னாலே தோன்றி ஒரு பெரிய சமுதாயமாக வளர்ச்சியடைந்து வாழ்ந்து கொண்டிருந்த அவர்கள் இருக்கும்போது ஆதாமை முதல் மனிதன் என்று எப்படிச் சொல்ல முடியும்?. ஞானத்திலும், யோகத்திலும் சிறந்த சிவனும், அம்மணமாய் அலைந்து கொண்டிருந்த ஆதாமும் ஒருவராகிவிட முடியுமா?. ஆதாமின் விலா எலும்பில் இருந்துதோன்றிய ஏவாள் எங்கே! தத்துவார்தமாக பதிபக்திக்காக சிவன் அங்கத்தில் ஒருபாதியை பரிசாகப் பெற்ற பார்வதி எங்கே!.

புராணங்களில் இருந்த அரக்கர்களை புறச்சமயத்தார் கேலி செய்கிறார்கள். ஆனால் விவிலியத்தில் ஆதியாகமத்தில் முதல் பத்து

வரிகளில் (Genesis chapter 6, Verses 1-10) தேவர்கள், அரக்கர்கள் வாழ்ந்ததாகவும், அவர்கள் மனிதப் பெண்களை மணந்து கொண்டு ஒருபுது இனத்தை விருத்தி செய்ததாகவும் கூறப்பட்டிருக்கிறது.இது என்ன கூற்று?. கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கல் எறியலாமா?.

மூவொருமைக் கோட்பாடு (Doctrine of Trinity) என்பதை புறச்சமயத்தார் நம்நாட்டு சிவன், பிரம்மா, விஷ்ணு என்ற மும்மூர்த்தி தத்துவத்தோடு ஒப்பிடுகிறார்கள். இது பொருந்தாப் பொருத்தம்!. அவதாரம் எடுத்த கடவுள், மனிதனை மீட்க தன்னையே பலியாக்கின பலிநிறைவேற்ற கோட்பாடு (Doctrine of fullfillment of Sacrifice) என்ற கொள்கை இந்துமதத்தில் இல்லை. இந்துமத அவதாரங்கள் எதிரிகளை அழித்து வெற்றிகரமாக மேல் உலகம் சென்றார்களே தவிர யாரும் சிலுவையில் அறையுண்டு சாகவில்லை. ஒருவனுடைய பாவத்துக்கு இன்னொருவன் பலியாவதை இந்துமதம் ஏற்றுக் கொள்வதில்லை.

தூய ஆவி (Ispiritus sanctus) என்பது பயந்து கிடந்த சீடர்களுக்கு ஊக்கம் கொடுக்க வந்த இறைவனுடைய ஆற்றல் என்றுதான் விவிலியம் கூறுகிறது. அதை அனாவசியமாக கொற்றவையுடனும் காளியுடனும் ஒப்புநோக்குகிறார்கள். காளி ருத்ரவடிவம் எடுத்து மண்டையோட்டு மாலைபோட்டு தீயவரைக் கொலை செய்பவள்: தூய ஆவி அப்படிப்பட்டவரா?.

"நட்ட கல்லைச் சுற்றி வந்து" என்ற சித்தர் பாடலை மேற்கோள் காட்டி விக்ரஹ வழிபாட்டை கேலி செய்கிறார்கள். ஆனால் அந்தப்பாடல் என்ன சொல்கிறது?. "நட்ட கல்லும் பேசுமோ?. நாதன் உள்ளிருக்கையில்?". என்கிறது. உள்ளத்திலிருக்கும் அந்தர் யாமியை தியானித்தால் நாதபிரம்மத்தை கேட்கலாமே என்று யோக மார்க்கத்தை விளக்குகிறதே தவிர அர்ச்சா விக்ரஹத்தை கேலி செய்யவில்லை. கோயில்களில் சித்தர்கள் தேனீக்கள் வடிவாக வந்து வழிபடுவதாக இந்து புராணங்கள் சொல்கின்றனவே.

அஜந்தா குகையிலே (குகை எண். 26) புத்தர் கையில் ஒரு ஜெபமாலை இருக்கிறது. அதைக் குறிப்பிட்டு இது ரோமன் கத்தோலிக்கர் ஜபிக்கும் ஜபமாலை என்று சாதிக்கிறார்கள். ஜபமாலை என்பது கத்தோலிக்கர்களுக்கு மட்டுமே உரிய சொத்தா என்ன?. சைவர், வைணவர், ஆண்டி பரதேசி, சந்யாசி, முனிவர். அனைவர் கையிலும் ஸ்படிக மாலை, ருத்ராட்ச மாலை, தாமரை விதை மாலை ஜபிக்கும் வழக்கம் ஆதி காலத்திலிருந்தே உண்டு. இதை இந்தியருக்குச் சொல்லிக் கொடுக்க பாலஸ்தீனத்திலிருந்து யாரும் வரவேண்டிய அவசியம் இல்லை.

உயிர்த்தெழுந்த யேசு கிருத்துவும் சுடுகாட்டில் நடனமாடும் சிவனும் ஒருவரே என்கிறார்கள். அறியாமையை மனிதர்க்கு உணர்த்த சுடலையாடியாக காட்சிதரும் சிவன் எங்கே? அடிபட்டு செத்துப்போய் ஆண்டவன் அருளால் பிழைத்து எழுந்த யேசு எங்கே?. செத்தாரைப் பிழைக்க வைக்கும் சித்தர் வாழ்ந்த நாடு இது. இறந்தவர் பிழைப்பதும், முதியவர் இளமையாவதும் இந்த நாட்டில் சாதாரணம். இது இந்துக்களுக்குப் பெரிய விஷயமே அல்ல. சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடலாமா?.

# Bibiligraphy


| பக்கம் | வரிகள் | வரி | Reference |
|---|---|---|---|
| 1 | 1 | மிகத்தொன்மையான | The Hindu online edition - Thrusday June 21st 2007 |
| 1 | 6 | சுஸ்ருதர் | WIKIPEDIA |
| 1 | 9 | எகிப்தியபிரமிடுகளில் | Religion of the ancient Egyptians by Alfred Wiedemann Kessinger Publishing April 30,2004 |
| 1 | 12 | அலெக்ஸாண்டர் | Alexander in India by W.E.Heitland, T.E.Raven Kessinger Publishing August 18, 2008 |
| 2 | 35 | அழகியமணவாளப் பெருமாள்நாயனார் | ஆசார்ஹ்ருதயம் by அழகியமணவாளப் பெருமாள்நாயனார் |
| 3 | 1 | முன்பே | Ancient Indian Law - Eternel values in Manusmiriti by Rama Joi, Universal law Publishing Co Pvt Ltd. First Edition 2002. |
| 3 | 34 | பக்கத்துநாட்டுக்கு | The Holdy Bible,Old testament Genesis- Chap.4. Verse 16 |


(Article Published on: Saturday, April 25, 2009)

**© All rights Reserved**

For more details contact: D.A.JOSEPH,
No: 18 fourth cross, Rainbow Nagar, Pondicherry, South INDIA.
Website: www.dajoseph.com E-mail: deyeje@yahoo.com Ph: +91 - 0413 - 2210187